சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா. 01 திரு. ராஜசேகர் த /பெ திரு.வேணு , வயது .39

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .-**

01. நான் MBA படித்துள்ளேன். நான் RO டெக்னிசீயன் ஆக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு எதிரியின் அண்ணன் சுரேஷ் என்பவர் என் நல்ல நண்பர் அவர் மூலமாக எதிரி எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். இருவரும் ஒரே தெருவில் வசித்து வருகிறோமா என்றால் இல்லை. எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டது. அவரது கணவர் பெயர் கேசவன். எதிரிக்கு ஒரு ஆண்பிள்ளை மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். எதிரியின் மகன் பெயர் கோகுல், மகள்கள் பெயர் எனக்கு தெரியாது. கடந்த 2021 ம் வருடம் டிசம்பர் மாதம் எதிரி பணம் கேட்டார். 08.01.2022 அன்று எதிரிக்கு நான் கடன் கொடுத்தேன். எதிரிக்கு பணம் கொடுத்த போது பொறுப்புறுதிக்காக ஆவணங்கள் ஏதேனும் பெற்றேனா என்றால் இரண்டு காசோலைகள் பெற்றேன். அந்த இரண்டு காசோலைகளையும் எதிரி பணம் பெற்ற தினமே பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார். நான் எதிரிக்கு 24 % வட்டிக்கு தான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி எத்தனை மாதங்கள் வட்டி கொடுத்தார் என்றால் வட்டி கொடுக்கவில்லை.

02. நான் இந்த காசோலையை வட்டி இல்லாமல் அசலுக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 768957, 768958 ஆகிய எண்கள் கொண்ட காசோலைகள் தான் எதிரி என்னிடம் கொடுத்தார். இரண்டு காசோலைகளில் எந்த காசோலை வைத்து இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் இரண்டு காசோலைகளை வைத்து தான் இந்த வழக்கு தொடுத்துள்ளேன். எதிரி காசோலைகளை கொடுக்கும் போதே கொடுக்க வேண்டிய பணத்தில் இரண்டு பாகங்களாக பிரித்து தான் காசோலை பூர்த்தி செய்து கொடுத்தார். 768958 என்ற எண்

கொண்ட காசோலை தேதி குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் 29.07.2022 ஆகும். இவ்வழக்கு காசோலைகள் என்ன காரணத்திற்காக திருப்பபட்டது என்றால் போதிய பணம் இல்லை என்று திருப்பபட்டது. 28.07.2022 அன்று முதல் காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பபட்டது. காசோலை திருப்பபட்ட பின்பு நான் எதிரியை அணுகி கேட்டேனா என்றால் அவருக்கு செல்போன் மூலம் அழைத்தேன்.

03. ஆனால் அவர் செல்போனை எடுக்கவில்லை. முதல் காசோலை திருப்பபட்ட பின்பு 28.07.2022 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பிற்கு எதிரி பதில் அனுப்பினாரா என்றால் இல்லை. சட்ட அறிவிப்பு பெற்று எத்தனை நாட்கள் கழித்து இந்த வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் எனக்கு குறிப்பிட்டு நினைவில்லை. காசோலை திருப்பபட்டு 67 நாட்கள் காலதாமாக 07.10.2022 அன்று தான் இவ்வழக்கு தொடுக்கப்பட்டது என்றாலும் எனவே இந்த வழக்கானது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டதால் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த புகார் ஆனது இரண்டு காசோலைகளும் திருப்பபட்டு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 142 கீழ் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**// உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Judicial Magistrate No.1 Thirupattur

**நீதித்துறை நடுவர் எண்.1**

**திருப்பத்தூர்**